தூத்துக்குடி மாவட்டக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
நக.எண். 3930/ஆ4/2016 நாள் .02.2017

பொருள்– நிர்வாகம் – உதவி பெறும்பள்ளிகள் – தூத்துக்குடி மாவட்டத்தில் – தி ரோமன் கத்தோலிக்க டயோசீசன் என்ற அமைப்பின்கீழ் செயல்படும் ஆர்.சி.பள்ளிகளை சிறுபான்மை தகுதியற்றதாக அறிவிக்க பரிந்துரை செய்யக் கோரியது – நீதிமன்ற வழக்கு WP (MD) No 11252 / 2016 ன் தீர்ப்பாணை நாள் 28.06.2016 ன்படி விவரம் தெரிவித்தல் – சார்பு.

பார்வை– 1. மனுதாரர் திரு. எஸ். பீட்டர்ராஜ் என்பாரது மனு நாள் 05.09.2015
2.சென்னை உயர்நீதி மன்ற வழக்கு WP (MD) No 11252 / 2016 ன் தீர்ப்பாணை நாள் 28.06.2016
3. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் 06.09.2016 மற்றும் 31.01.2017
4. நீதிமன்ற அவமதிப்பு வழக்கு அறிவிப்பு நாள் 11.11.2016
5. தூத்துக்குடி மாவட்டக் கல்வி அலுவலரின் பள்ளிப் பார்வைகள் 23.11.2016 முதல் 28.12.2016 முடிய
6. திரு. எஸ். பீட்டர்ராஜ் என்பாரிடம் மேற்கொண்ட விசாரணை நாள் 14.02.2017

-----

தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடி தி ரோமன் கத்தோலிக்க டயோசீசன் என்ற அமைப்பின் கீழ் செயல்படும் ஆர்.சி.பள்ளிகள் அனைத்தும் சிறுபான்மையற்றது எனக் கூறி அரசுக்கு விளம்புகை செய்து அனுப்பக் கோரியும், பள்ளிகளின் அங்கீகாரத்தை அனைத்துப் பள்ளிகளிலும் ஆய்வு செய்து உண்மைநிலை அறிந்து விதிகளுக்குட்பட்டு இரத்து செய்யக் கோரியும், மேற்படி பள்ளிகளுக்கு வழங்கும் அரசு மான்யத்தை நிறுத்துமாறும் வழங்கிய மான்யத்தை திரும்ப பெறவும் மனுதாரர் தனது 05.09.2015 நாளிட்ட கடிதத்தில் கோரியிருந்தார்.

மேற்காண் மனு சார்பாக தூத்துக்குடி தி ரோமன் கத்தோலிக்க டயோசீசன் என்ற அமைப்பின் கீழ் செயல்படும் பள்ளிகளுக்கு இவ்வலுவலக கடிதம் வாயிலாக உரிய ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டது. அனைத்துப் பள்ளிகளிருந்தும் ஒரே வகையான ஆவணங்களே பெறப்பட்டது. இந்நிலையில் மனுதாரர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பார்வை 2ல் கண்ட வழக்கு எண் WP(MD) NO 11252/2016 தொடர்ந்து அவ்வழக்கிற்கு 28.06.2016 ல் தீர்ப்பாணை பெறப்பட்டது. இதில் மனுதாரரின் கோரிக்கைகளை நன்கு பரிசீலிக்குமாறும் பள்ளி ஆவணங்களை பார்வையிட்டு உரிய ஆணை வழங்குமாறும் தீர்ப்பிடப்பட்டிருந்தது.

Scanned by CamScanner

சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண் WP(MD) NO 11252/2016 ன் 28.06.2016 நாளிட்ட தீர்ப்பாணைக்கு இணங்க தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடி தி ரோமன் கத்தோலிக்க டயோசிசன் என்ற அமைப்பின் கீழ் செயல்படும் அனைத்து ஆர்.சி பள்ளிகளும் (19) , நேரில் பார்வையிட்டு நிலம் சம்மந்தப்பட்ட ஆவணங்கள், பள்ளி அங்கீகார ஆணைகள், அது தொடர்பான ஆவணங்கள், சிறுபான்மை அந்தஸ்து குறித்து பள்ளிகளில் பராமரிக்கப்படும் ஆவணங்கள் மற்றும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அரசு நிர்ணயம் செய்த பணியிடங்கள் போன்ற இனங்கள் 23.11.2016 முதல் 28.12.2016 முடிய மாவட்டக் கல்வி அலுவலரால் நேரில் நேரில் ஆய்வு செய்யப்பட்டது.

அனைத்து பள்ளிக்கும் நேரில் ஆய்வு செய்யப்பட்டபோது அப்பள்ளிகளில் பள்ளி நிர்வாகம் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண் WP No 570 / 75 தீர்ப்பாணை நாள் 24.09.1976ன்படி சிறுபான்மை அந்தஸ்து பெறப்பட்ட தீர்ப்பு நகல் மற்றும் சென்னை பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க. எண் 24541 / ஜி3 / 76 நாள் 20.11.1976ன்படி சிறுபான்மைத் தகுதி குறிப்பிட்ட ஆணை நகல்களே காணப்பட்டன. நில ஆவணங்கள் சார்பாக பள்ளிகளில் ஆய்வு செய்தபோது ஒரே அமைப்பின் கீழ் ஆர்.சி.மிஷன், ஆர்.சி. பள்ளிகள் தூத்துக்குடி. தூத்துக்குடி டயோசிசன் அசோசியசன் என்ற வெவ்வேறு பெயர்களில் செயல்பட்டு வருவதாக தெரிய வருகிறது. ஏற்கனவே நீதிமன்றத் தீர்ப்பாணையின் மீது பார்வை 3ல் கடிதங்கள் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டிருந்தது.

மேலும் அரசுக் கடிதம் (நிலை) எண் 17 பள்ளிக்கல்வி (டி1) துறை நாள் 19.01.2009 ல் வழக்கு டபிள்யு.பி.எண் 7235 / 86 ல் சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட 30.04.1998ம் நாளிட்ட தீர்ப்பாணையின் மீது தாக்கல் செய்யப்பட்ட மறு ஆய்வு மனு எண் 139 / 2007ல் 12.11.2007 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பாணையில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கிணங்க தூத்துக்குடி மறை மாவட்ட ஆர்.சி. பள்ளிகளில் கூட்டு மேலாண்மை தகுதி குறித்தும், அப்பள்ளிகளுக்கிடையே பொது மாறுதலை அனுமதிப்பது குறித்தும் கடந்த கால ஆணைகள் மற்றும் நடைமுறைகளின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் மேற்காண் பொருள் தொடர்பாக ஏற்கனவே அரசு மேற்குறிப்பாணை எண் 45181 / இ2 / 60.2 கல்வி நாள் 11.06.1960ல் வழங்கப்பட்டுள்ள ஆணைகள் தொடர்ந்து செயல்படுத்திட அனுமதி வழங்கி அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் திரு. எஸ். பீட்டர்ராஜ் என்பாரை நீதிமன்ற தீர்ப்பாணை அறிவுறுத்தலின் பேரில் நேரடி விசாரணைக்கு வருகை தர தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் மனுதாரர் 14.02.2017 அன்று நடைபெற்ற நேரடி விசாரணைக்கு கலந்து கொண்டார். அவ்விசாரணையின் போது

Scanned by CamScanner

மனுதாரர் மேற்படி பள்ளி நிர்வாகம் சிறுபான்மை அந்தஸ்து பெறுவதற்காக ஆவணங்களை சுயமாக தயார் செய்து சமர்பித்துள்ளது எனவும், திரு. எஸ். பீட்டர்ராஜ் என்பார் மாவட்ட பதிவாளரிடம் பதிவு எண் 48 / 2016 நாள் 04.07.2016ன்படி பதிவு செய்த The Roman Catholic Diocese of TUTICORIN என்ற அமைப்பே சரியானது எனவும் தெரிவித்தார். ஆனால் அதற்கான ஆதாரங்களை விசாரணையில் மனுதாரர் முன்னிலைப்படுத்தவில்லை. ஆதாரமாக தான் பதிவு செய்த The Roman Catholic Diocese of TUTICORIN என்ற அமைப்பு பதிவையே முன்னிலைப்படுத்தியுள்ளது ஏற்கத்தக்கதாக இல்லை.

மனுதாரரின் கோரிக்கையின் மீது தூத்துக்குடி தி ரோமன் கத்தோலிக்க டயோசீசன் என்ற அமைப்பின் கீழ் செயல்படும் அனைத்துப் பள்ளி ஆவணங்களை ஆய்வு செய்ததில் மேற்காண் நிர்வாகம் The தூத்துக்குடி டயோசீசன் அசோசியேசன் என்ற பெயரில் 1937 – 38 பதிவு செய்து சென்னை உயர்நீதிமன்ற வழக்கு WP No 570 / 75 தீர்ப்பாணை நாள் 24.09.1976 மற்றும் சென்னை பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க. எண் 24541 / ஜி3 / 76 நாள் 20.11.1976ன்படியே நீண்ட நாட்களாக சிறுபான்மை நிர்வாகமாக இயங்கி வருகிறது. மேற்காண் நிர்வாகத்தில் உள்ள பள்ளிகளின் அங்கீகாரத்திற்கு தேவையான கட்டிட உறுதிச்சான்று, கட்டிட உரிமைச்சான்று, சுகாதாரச் சான்று, தீயணைப்புத் துறையின் தடையின்மைச் சான்று போன்ற சான்றுகள் பெற்றே தொடர் அங்கீகாரம் வழங்கப்படுகிறது. மேலும் தூத்துக்குடி தி ரோமன் கத்தோலிக்க டயோசீசன் என்ற அமைப்பின் கீழ் தூத்துக்குடி மாவட்டத்தில் செயல்படும் அனைத்து பள்ளிகளுக்கும் வழங்கப்படும் மான்யம் தொடர்பான ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு பள்ளிகளுக்கு அரசால் அனுமதிக்கப்படும் பணியிடங்களுக்கு மட்டுமே அரசு மான்யம் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு பள்ளிக்கும் பணியாற்ற அனுமதிக்கப்படும் ஆசிரியர்களின் எண்ணிக்கை தூத்துக்குடி முதன்மைக் கல்வி அலுவலர் / மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களால் நிர்ணயம் செய்து ஆணை வழங்கப்படுகிறது. அரசால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களுக்கு மட்டுமே மான்யம் வழங்கப்பட்டு வருகிறது என்ற விவரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகிறது. எனவே மேற்காணும் சூழ்நிலையில் திரு. எஸ். பீட்டர்ராஜ் என்பார் அளித்துள்ள புகார் மனு சார்பான கோரிக்கை ஏற்க இயலாத நிலை உள்ளது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.

24/02/2017

மாவட்டக் கல்வி அலுவலர்(பொ)
தூத்துக்குடி

பெறுநர்– திரு.எஸ். பீட்டர்ராஜ்.
9 அரிசிக்கடை தெரு, ஆ.வே. மரியா,
சாத்தான்குளம்.

Scanned by CamScanner